மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விலையை உயர்த்த வேண்டாம், 'ஃப்ளையிங் ஸ்க்வாட்'களை எடுத்து விடுங்கள் என்கிறார். கள்ளத்தனமாக யார் நெல் கடத்தலில் ஈடுபட்டாலும் அதை அரசாங்கம் கண்டிப்பாய்த் தடுக்கும்.

பருப்பு விற்பனையில் நஷ்டம்

* 281 **வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** மாண்புமிகு உணவு-வணிகவரித்துறை அமைச்சர் 1967 ஜூன் மாதம் 29-ம் தேதி கேள்வி எண். 107-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பருப்பு விற்பனையில் 22 லட்சம் நஷ்டத்தை ஒட்டி அறிக்கை விடுவதாக சட்டமன்றத்திற்கு அறிக்கை எப்போது விடப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சட்டப்பேரவை முன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: அறிக்கையில் உள்ளபடி பார்த்தால் மிகக் குறைந்த விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது. அதிகமான விலைக்கு விற்கப்பட்டிருப்பதும் தெரிகிறது. இதன் காரணமாகக் குறைந்த பட்சம் 15 லட்சமாவது ஆதாயம் கிடைத்திருக்க வேண்டுமே, 3.45 லட்சம்தான் நிகர லாபம் என்று இருக்கிறதே, இது சரியான புள்ளி விவரம்தானா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வாங்கி இரண்டாண்டு வைத்துவிட்ட காரணத்தினால் கொஞ்சம் கெட்டுப்போய்விட்டன. அவற்றை விலக்கி மற்றவற்றை இலாபத்தில் விற்றதனால் மொத்த இலாபமும் குறைந்திருக்கிறது.

கனிப்பொருள் படிவங்கள்

* 282 **வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டத்தில் லந்தகோட்டை புஞ்சை நிலங்களில் விலையுயர்ந்த பச்சை, நீலம், போன்ற கற்கள் விளைகின்றன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதை ஆய்ந்தறிய துரிதமான நடவடிக்கை எடுக்க உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். வரதராஜன்: மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டம் லந்தகோட்டை பகுதியில் உழும்போதே நிலக்காரர்களுக்குப் பச்சைக் கற்கள் கிடைக்கின்றன, அவற்றை எடுத்து

*372–374-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.